# தொபகடீர்

கீதா தர்மராஜன்
கலை: வந்தனா பிஸ்ட்



அற்புத இந்தியா!
KATHA

வாங்க! நீல புக்ஸ் படிக்க வாங்க!



அற்புத இந்தியா!






என்னுடன் சேர்ந்து
நமது அற்புத
இந்தியாவை
பார்க்க வரீங்களா?
உங்களுக்காக, இதோ!
52 விறுவிறுப்பான
கதை புக்ஸ்!

படத்தை பார்த்து
குழந்தைகளை
உற்சாகமுடன் கதை
சொல்ல தூண்டும்
வார்த்தைகளற்ற
புத்தகம் இதோ!

ஆசிரியர்களுக்கான
workshop பெற
அணுகவும்
+ 91 8800170200





# தொபகடீர்


கீதா தர்மராஜன்
கலை: வந்தனா பிஸ்ட்





KATHA
டெலலி | சென்னை | பெங்களூர்



பெரிய காற்றும்

நானும்

என் குட்டி பிரெண்டும்

ஓடி, பாடி, விளையாடிக் குதிக்கிறோம்...

மேல மேல இன்னும் மேல...

இப்போ நாங்க
இங்க இருக்கோம்.

அப்புறம், நாங்க அங்க
இருக்கோம்

மேகத்துக்கு மேல கீழ

வயசான மரத்தோட புதுப்புது இலையில

உள்ள வெளிய....


# கீழே
## கீழே
### கீழே

பச்ச பச்ச புல்லுல தொபகடீர்!-ன்னு விழறோம்!

மிதந்து மூழ்கி

ஆத்துல இருக்குற வானம் எங்கள பாத்து சிரிக்குது.

ஜாலியாஆஆஆ!





காத்துக்கும், மரத்துக்கும்,
பிரெண்டுக்கும், எனக்கும்.

## செயல்பாடு 1

காலியாயிருக்குதா?
நிரம்பியிருக்குதா?


ஒரு பலூன வெச்சு கண்டுபிடிக்கலாம்

1




ஒரு சின்ன பலூன எடுத்துக்கோங்க.

2




அந்த பலூன ஒரு தண்ணி குழாயில மாட்டுங்க.

3




இப்ப மெதுவா குழாய திறந்து பலூன்ல தண்ணி நிரப்புங்க.

4



இப்ப பலூன் எப்படி வடிவம் மாறுதுனு பாருங்க.

5



ஆனா பலூன் நிரம்பியதும் குழாய உடனே மூடணும். இல்லன்னா அது வெடிச்சிடும்!

உங்க வயிறு ரொம்ப காலியா இருந்தா என்ன செய்வீங்க? உங்க வயிறு நிரம்பிடுச்சின்னு எப்ப உங்களுக்கு தெரியும்?

# செயல்பாடு
# 2



உங்களால் எதிரான விஷயங்களைச் செய்ய முடியுமா?

கீழே சில எளிய செயல்களும் அவற்றுக்கு எதிரான செயல்களும் தரப்பட்டுள்ளன.



| | | |
|---|---|---|
| எழுந்திரு – உட்கார் | மூச்சு உள்ளே இழு – மூச்சு வெளியே விடு | கைகளை மேலே உயர்த்து – கைகளை கீழே இறக்கு |
| தூங்கு – எழுந்திரு | கத்து – கிசுகிசுன்னு பேசு | அழு – சிரி |

இப்போ உங்க பிரெண்டுங்க கூட சேர்ந்து இந்த விளையாட்ட விளையாடி ஜாலியா இருங்க A மற்றும் B என இரு குழுக்களாகப் பிரிஞ்சு எதிரெதிராக நின்னுக்கோங்க. குழு A ஒரு செயலைச் செஞ்ச உடனே, குழு B அதற்கு எதிரான செயலைச் செய்யணும்.

நீங்க எதிரெதிரான செயல்களச் செஞ்சு விளையாடக்கூடிய பிற அற்புதமான விளையாட்டுகள யோசிச்சு உருவாக்க முடியுமா?



# செயல்பாடு
# 3



வடக்கா, தெற்கா, கிழக்கா மேற்கா?

இதோ ஒரு குட்டிப் பாட்டு, உங்க பிரெண்ஸோட இத பாடி ஆடி மகிழலாம்!



ஒரு அழகு சிட்டுக்குருவிக்கு நாலு குட்டி குருவி இருந்துச்சாம்.
அந்த நாலும் வேடிக்கையா சிறகடிச்சு பறந்துச்சாம்.
முதல் குருவி சூரியன் உதிக்கும் கிழக்கு திசையிலே
இரண்டாவது குருவி சூரியன் ஓய்வெடுக்கும் மேற்கு திசையிலே
மூன்றாவது குருவி பனிப்படர்ந்த வட திசையிலே
நான்காவது குருவி கடல் விரிந்த தென் திசையிலே
உலகத்த சுத்தி திரிஞ்சுச்சாம்.
கடைசியா நாலும் வீட்டுக்கு திரும்பி வந்துச்சாம்.
வடக்கு தெற்கு திசையிலோ, கிழக்கு மேற்கு திசையிலோ,
எந்த திசையா இருந்தாலும் குருவி வீடுதான் சிறந்த வீடு!





வீட்டுல இருக்கும்போது தினமும் காலையில சூரிய உதயத்த எந்த திசையில பாப்பீங்க?



# அன்புள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களே,

## ஏன் இந்த புதுவழி புத்தகங்கள்?

ASER 2022 அறிக்கை படி, 2 ஆம் வகுப்பு புத்தகங்களை, 3ஆம் வகுப்பில் 4.8% மாணவர்களும், 5ஆம் வகுப்பில் 25.2% மாணவர்களும், மற்றும் 7ஆம் வகுப்பில் 51.3% மாணவர்களும் மட்டுமே படிக்க முடியும் என்பதை கூறியிருக்கிறது. மேலும் இந்த எண்ணிக்கை நாட்டிலேயே மிகக் குறைந்த படிப்பு திறனாக உள்ளது.[1]

## கதா

கதா ஒரு இலாப நோக்கமற்ற நிறுவனம், பத்மஸ்ரீ கீதா தர்மராஜன் அவர்களால் 1988ல் துவங்கப்பட்டது . கதைகளை அஸ்திவாரமாக வைத்து, இந்தியாவில் பல அரசு பள்ளிகளிலும் பிரைவேட் மற்றும் NGO உடன் கதா வேலை செய்து கொண்டிருக்கிறது. மேலும் **StoryPedagogyTM** என்ற கல்வி கட்டமைப்பு, பரத நாட்டிய சாஸ்தரத்தையும், வள்ளுவரின் “கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என்ற குறளையும் மனதில் ஆழப்படுத்தி புதிய முறையில் 2000-இல் உருவாக்கப்பட்டது. இதை அடிப்படியாக வைத்து, 36 வருட அனுபவம் கொண்ட கதா எடிட்டர்கள், 4 முதல் 12 வயது குழந்தைகளுக்காக தனிப்பட்ட கவனத்துடன், அன்பும் அக்கறையும் கொண்டு எழுதப்பட்டது.

## கதா பள்ளிகள்

கதாவின் முதல் பள்ளி 1990ல் தொடங்கினோம், கதை வழியாக எண்ணும் எழுத்தும் மற்றும் உலக அறிவையும் பெறுகிறார்கள். இப்பொழுது எங்கள் பள்ளி மாணவர்கள், IBM, Citibank, மற்றும் அரசு வேளைகளில் சிறந்த நிலையில் உள்ளார்கள். அவர்கள் மாத வருமானம் 100 மடங்கு உயர்ந்துள்ளது.

## தமிழ்நாட்டில்

இந்த கதைகளை, கடந்த 2 ஆண்டுகளாக, அரசு தொடக்கப்பள்ளிகளில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற குழந்தைகளுடன் சோதனை செய்துள்ளோம். கதைக் கல்வியின் தாக்கத்தால் 50% படிப்பு திறன் மேம்பட்டு உள்ளது. அதே மகிழ்ச்சியில் உங்களுடன் பகிர்வதில் பெருமை அடைகிறோம்.

## எனக்கு படிக்க பிடிக்கும்!

இந்த தரப்படுத்தப்பட்ட புத்தகங்களை, வானவில் நிறங்களில் பிரித்திருக்கிறோம். 0 – 3000 வார்த்தையில்லா புத்தகத்தில் தொடங்கி குட்டி குட்டி வார்த்தைகள் கொண்ட கதைகள், கவிதைகள் மற்றும் பிக் ஐடியாக்கள் (பெண் குழந்தைகள், பூமி, சமத்துவம், இரக்கம்) முதல்-தலைமுறை வாசகர்களுக்கு படிப்பில் ஆசையை தூண்டும், லட்சக் கணக்கான குழந்தைகள், “எனக்கு படிக்க பிடிக்கும்!” என்று சொல்லும் புக்ஸ், இதோ உங்கள் குழந்தைகளுக்காக!

## இயற்சொல்

கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையில் உள்ள சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். (நன்னூல் 271)

- தமிழ் ஆகித்திரியாது யார்க்கும் தம்பொருள் விளக்கும் தன்மை இயற்சொல்.
- கதா உபயோகித்துள்ள சொற்கள், எளிமை இயல்பால் அனைத்து குழந்தைகளுக்கும் பொருள் விளங்கும் வகையில் உள்ளன.
- இயற்சொல்லில், சங்க தமிழும் இங்கிலிஷ் வார்த்தைகளையும் பயன்படுத்தி இருக்கிறோம்.

## அற்புத இந்தியா!

“எனக்கு படிக்க பிடிக்கும்” லைப்ரரியில் உள்ள 108 கதைப் புத்தகங்களை கொண்ட ஒரு அழகிய தொகுப்பு. வாங்க! படிங்க! இந்தியாவின் பல மாநிலங்களை பற்றி அறிங்க! புதுப்புது அனுபவத்தை பெருங்க! அழகாக எழுதி, சித்தரித்து, பரிசு பெற்ற புத்தகங்கள் இவை!

## எப்படி உபயோகிப்பது?

வாரத்திற்கு ஒரு கதை! கண்களுக்கு மகிழ்ச்சிக் கொடுக்கும், மூளைக்கு வேலை கொடுக்கும். உங்கள் குழந்தையுடன், பக்கம் பக்கமாக திருப்பி, படங்கள் சொல்லும் கதையை டிஸ்கஸ் செய்யுங்கள். உங்கள் குழந்தையின் கதையை கேட்டு மகிழுங்கள். மெல்ல குழந்தைக்கு படிப்பில் உற்சாகம் வரும்போது, புதிய புதிய புக்ஸை குழந்தை தானாகவே கேட்க ஆரம்பிக்கும்.

## எங்கள் நோக்கம்

ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியுடனும், அர்த்தம் புரிந்தும் வாசிக்க வேண்டும். அப்படி படித்தால், வாழ்நாள் முழுவதும் கற்றல் நிலைக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

Source: https://www.newindianexpress.com/states/tamil-nadu/2023/Jan/20/42-of-class-1-students-in-tn-not-able-to-identify-numbers-aser-2539536.html

**கீதா தர்மராஜன்** தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். குழந்தைகளுக்கான எழுத்தாளர், அவர் 1988 இல் கதாவைத் தொடங்கினார். இலக்கியம் மற்றும் கல்விக்கான அவரது பணிக்காக பத்மஸ்ரீ உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**வந்தனா பிஸ்ட்** ஒரு பிரபலமான இந்திய கலைஞர் மற்றும் எழுத்தாளர் ஆவார். பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்றுள்ளார்.

## இந்த கதை பற்றி

ஒரு குட்டி பெண்ணும் அவள் குட்டி பிரெண்டும் காற்றுடன் விளையாடுவதை பாக்கலாம். வாருங்கள் எங்களுடன் இந்த உல்லாசமான பயணத்திற்கு! சுழன்று சுழலும் சுற்றுலாவிற்கு!

## ஆசிரியருக்கு

ILR புத்தகத்திற்கு உங்களை வரவேற்கிறோம். ஒவ்வொரு தொடரிலும் 13 புத்தகங்கள் என மொத்தம் 8 தொடர்கள் இருக்கின்றன. இவை 0 வார்த்தைகள் கொண்ட கதைகளில் இருந்து 3000 வார்த்தைகளை கொண்ட கதைகளை படிக்க நிச்சயம் உற்சாக படுத்தும்! குழந்தைங்க பாஷையில எழுதிய இந்த கதைங்க, உறுதியாக அவங்க எண்ணும் எழுத்தும் அதிகரிக்கும்!

எடிட்டர் & ஆர்ட் டைரக்டர்: **கீதா தர்மராஜன்** | ஆசிரியர் குழு: **வசந்தி, அஷ்வினி, ராகினி, கௌசல்யா** | டிசைனர்: **விக்ரம் குமார்** | டீடிபி: **உதயகுமார்**


KATHA

இந்த பதிப்பு முதலில் 2021 இல் வெளியிடப்பட்டது
பதிப்புரிமை © கதா, 2012, 2021, 2024
உரை பதிப்புரிமை © கீதா தர்மராஜன்
சித்திரங்களுக்கான காப்புரிமை © கதா
இப்புத்தகத்தின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை, வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி புத்தகத்தின் எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்கவோ அல்லது வேறு எந்த வடிவத்திலும் பயன்படுத்தவோ முடியாது.
புது தில்லியில் அச்சிடப்பட்டது.
ISBN 978-81-97937-05-7

KATHA ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். இந்த புத்தகம் 300 மில்லியன் குடிமக்களின் சவாலின் படைப்பானதாகும். பள்ளிக்குச் செல்லும் 300 மில்லியன் இந்தியக் குழந்தைகளுக்கு புதிய கற்றல் முறைகள் மூலம் அவர்களின் வகுப்புக்குறிய வாசிப்பை அடைய நாங்கள் உதவுகிறோம்.

டெல்லி: A3, சர்வோதயா என்கிளேவ், ஸ்ரீ அரபிந்தோ மார்க், புது டெல்லி 110 017
சென்னை: 6, பாபநாசம் சிவன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி: டெல்லி: +91 11 41829998 | சென்னை: +91 98400 30073
மின்னஞ்சல்:marketing@katha.org
இணையதளங்கள்: www.katha.org | www.books.katha.org | www.learn.katha.org

இந்தப் புத்தகத்தின் விற்பனை வருமானத்தில் பத்து சதவிகிதம் கதா பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் தரமான கல்விக்குப் பயன்படுத்தப்படும்.



## KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பு. பத்மஸ்ரீ கீதா தர்மராஜன் அவர்களால் 1988 இல் துவங்கப்பட்டது. "இலக்கியத்தில்லிருந்து எழுத்தறிவு" என்ற கல்வி முறையை சாத்தியமாக்குவதே கதாவின் நோக்கம். அர்த்தமுள்ள, தரமான புத்தகங்கள் மூலம் குழந்தைகளை தரநிலை வாசிப்புக்கு(Grade Level) படிக்க எளிய முறையில் உதவி புரிகின்றோம்.

குழந்தைகளுக்கு வாசிப்பினால் ஏற்படும் மகிழ்ச்சியை அதிகரிக்க மிகுந்த அர்ப்பணிப்போடு ஒவ்வொரு வருடமும் 2,00,000 திற்கும் மேற்பட்ட வறுமையில் உள்ள குழந்தைகளுடன் நாங்கள் வேலை செய்துவருகிறோம்.

"[கதா] ... இந்தியாவின் கிரீடத்தில் ஒரு கல்வி நகை."
**– நயோயுகி ஷினோஹரா, துணை நிர்வாக இயக்குனர், சர்வதேச நாணய நிதியம்**

"குழந்தைகளுக்கு கதாவின் புத்தகங்கள் மிகவும் பிடிக்கும். அதனால்தான் ... குழந்தைகளுக்காக இதுபோன்ற அழகான படப் புத்தகங்களை உருவாக்குகிறார்கள்."
**- டைம் அவுட்**

"குழந்தைகள் நிலையான மற்றும் உண்மையான மாற்றத்தையும் இந்த சமூகத்தில் கொண்டுவர முடியும், அவர்களுடைய புத்தகத்தில் காண்பதைப்போல. இந்த எண்ணம்தான் கதாவின் பணிகளை சிறப்பாக இயக்குகிறது."
**- பேப்பர் டைகர்ஸ்**






அற்புத இந்தியா | நீல தொடர் | சாகசம்!



































Read 108 inspiring stories FREE at learn.katha.org

**FOR OUR BOOKS**

www.books.katha.org

குழந்தைகளுக்கானது
இந்த கதா புத்தகம்
ISBN 978-81-97937-05-7
9 788197 937057
www.books.katha.org
₹ 85/-

கதா புக்ஸ்: கலியும் கருத்தும்